# யாழ்நகரில் அதிகாலை, பகல் குண்டுவீச்சு

நேற்று அதிகாலை 5 மணியளவில் ஒரு அவ்ரோ விமானம் யாழ் நகரம் பகுதியை வட்டமிட்டு குண்டுகளை வீசியது. இதனால் கொட்டடி லைடன் சந்திக்கு அருகில் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்களின் வீடுகள் - முற்றாகச் சேதமடைந்துள்ளன. இந்த வீடுகளில் எவரும் இல்லாததால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மற்றொரு குண்டு கோட்டைக்கு அருகில் விழுந்து வெடித்தது இரண்டு தாக்குதல்களாலும் யாழ் நகரமே அதிர்ந்தது. இதே நேரம் சீ பிளேனும் ஹெலிகொப்டர் ஒன்றும் மணியந்தோட்டம், குருநகர், கொட்டடி, கடற்கரைப் பகுதிகளை வட்டமிட்டன, ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பலாலியிலிருந்தும், மண்டைதீவிலிருந்தும் நகரை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இதேபோல பகல் 2-40 க்கும் 3-15 க்கும் அவ்ரோ விமானம் கோட்டை,

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 283 பிரஜோற்பத்தி ஐப்பசி 06 (23 10 1991) புதன்

# கௌதாரிமுனையருகில் படை மீது புலிகள் தாக்குதல்

## நகரமுடியாது படையினர் சிக்கினர்

குடாநாட்டின் தெற்கேயுள்ள கௌதாரிமுனையருகே தரையிறங்கிய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்புத்தாக்குதலினுள் சிக்கியுள்ளதாக நேற்று மாலை அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முன்னதாக கடற்படைப் படகுகளில் விமானத்தாக்குதலின் உதவியுடன் வந்த படையினர் இப்பகுதியில் வைத்து புலிகளின் கடும் தாக்குதலுக்குள்ளாகினர். இதனால் பின்வாங்கிய படையினர் மீண்டும் நேற்றுக்காலை விமானங்கள் குண்டுவீச்சை நடாத்த கடலில் இருந்து பீரங்கிப் படகுகள் தாக்ககௌதாரி முனைக்

—04ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

கீரிமலைப் பகுதியில் நேற்று நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் வாசன் (பரமலிங்கம்-யசோதரன் மானிப்பாய்) வீரமரணமடைந்தார்.

## பீரங்கித்தாக்குதல்

நேற்று கட்டுவன் பகுதியில் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின. இதேவேளை வடமராட்சி கிழக்குக் கடலில் நிலை கொண்டுள்ள கடற்படையினரும் இடையிடையே பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர்.

## மீனவக் குடும்பங்கள் இடம்பெயர்வு

கௌதாரிமுனை, வெட்டுக்காட்டுப்பகுதியில் வாழ்ந்த 150 மீனவக்குடும்பங்கள் தங்கள் உபகரணங்களுடன் கடல் வழியாக நேற்றுமுன் தினம் இரவோடுஇரவாக இடம் பெயர்ந்துஅரியாலை கிழக்குப் பகுதிக்கு வந்துள்ளன.

## மண்டைதீவிலிருந்து இராணுவம் கோட்டை நோக்கி ஷெல் வீச்சு

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முற்பகல் 11 15 மணியளவில் யாழ் கோட்டைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்

ஆறு ஷெல் குண்டுகள் கோட்டைப் பகுதியில்

—04ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் நடமாட்டத்திற்கு பச்சிலைப்பள்ளியில் தடை

பச்சிலைப்பள்ளியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான சிவத்தார் வயல், புல்லாவெளி, புதுமடம், நித்தியவெட்டை, கட்டைக்காடு, முள்ளியான், பெரிய பச்சிலைப்பள்ளி கொட்டறுத்தர் குளம், இயக்கச்சி ஆகிய பகுதிகள் மக்கள் நடமாட்டத்

—04ஆம் பக்கம் பார்க்க

## எழுவைதீவிலிருந்து கர்ப்பிணி யாழ்ப்பாணம் வந்தார்

எழுவைதீவில் இருந்து இளம் கர்ப்பிணிப்பெண்மணி ஒருவர் அவரது பெற்றோருடன் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டார்.

திருமதி அமலபுஷ்பநாயகி பாவிலுப்பிள்ளை (33), திருமதி அந்தோனிப்பிள்ளை மடுத்தீன்பிள்ளை (56-தாய்),

—04ஆம் பக்கம் பார்க்க

## பண்ணையில் உள்ளவர்கள் யார் என்பது தெரியவில்லையாம்!

யாழ் பண்ணைப்பகுதியில் இரண்டாயிரம் பேர் திரண்டுள்ளனர் எனவும் இவர்கள் பொதுமக்களா, விடுதலைப் புலிகளா என்பது மண்டைதீவில் உள்ள படையினருக்கு சரிவரத் தெரியவில்லை என

—04ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

இன்று கூடவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தொடரைப் பகிஷ்கரிப்பது என நான்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நேற்று நடைபெற்ற இக்கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கியசோஸலிஸ முன்னணி, ஈ. பி. ஆர் எல். எவ் ஆகிய எதிர்க்கட்சிகளே இம் முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது நம்பிக்கையையிழந்துவிட்ட சபாநாயகர் எம். எச் முஹமட் தலைமை தாங்கும் பாராளுமன்றக் கூட்டங்களில் தம்மால் கலந்து கொள்ள

— 04 ஆம் பக்கம் பார்க்க

## எழுவைதீவில் படையினரால் 300 பேர்வரை தடுத்துவைப்பு

எழுவைதீவில் கடற்படையினர் நிலை கொண்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர் ஒருவர் தெரிவித்தார்.

எவரையும் அத்தீவிலிருந்து வெளியேறக்கூடாது என்றும் வீடுகளில் இருக்குமாறும் படையினர் பணித்துள்ளனராம்.

இங்கு 600 க்கும் மேற்பட்ட மக்கள் உணவு, சுகாதார வசதிகள் இன்றி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (07)

## களுத்துறைச் சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

தென்னிலங்கைகளுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 200 தமிழ் கைதிகள் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பி பி. ஸி தெரிவித்தது.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இவர்கள் எந்த விதவிசாரணையும் இன்றிதடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர்,

இந்த 200 தமிழ்க் கைதிகளும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டுள்ளதாக பி. பி ஸி. மேலும் தெரி

—04ஆம் பக்கப் பார்க்க

## செஞ்சோலை சிறுவர் இல்லம் தலைவர் பிரபாகரன் வாழ்த்து

தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் உன்னதப் பணியை இலட்சியமாகக்கொண்ட செஞ்சோலை சிறுவர் இல்லம் இன்று திறக்

—04ஆம் பக்கம் பார்க்க

# வடக்குக் கிழக்குப் பகுதியில்

# 4179 ஆசிரிய வெற்றிடங்கள்!

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் 4179 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 474, மட்டக்களப்பு மாவட்டத்தில் 1069, கல்முனை கல்வி மாவட்டத்தில் 798, திருமலை மாவட்டத்தில் 726, வவுனியா மாவட்டத்தில் 525 தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன

திருமலை மாவட்டத்தில் 201 சிங்கள மொழி ஆசிரியர்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 354 சிங்கள மொழி ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரிய நியமனம் இப்பட்டியலை அனுசரித்தே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தாண்டிக்குளம் தடைமுகாமை தாண்டுவதில் தாமதம்

யாழ்நகரிலிருந்து மிகுந்த சிரமத்தின்மத்தியில்கொழும்பு செல்பவர்கள் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக தாண்டிக்குளத்தில் உள்ள பாடசாலையொன்றில் தங்க வைக்க படுகின்றார்கள்.

தாண்டிக்குளத்திலுள்ள பாடசாலையில் நீண்டவரிசையில் நின்று அனுமதி பெற்றுச் செல்பவர்களுக்கு மட்டும் தான் வவுனியா புகையிர நிலையத்தில் புகையிரதத்துக்குரிய ரிக்கற் வழங்கப்படுவதாகக்கூறியே வரிசையில் மக்களை வரப்பணிக்கின்றார்கள்.

இவ்வாறு வரிசையில் நின்று அனுமதியைப் பெற்றுச் செல்வதில் தாமதம் ஏற்பட்டால் புகையிரதம் இவர்களைவிட்டு விட்டே கொழும்பிற்குப் புறப்பட்டு விடுகின்றது இதனால் கொழும்புப் பிரயாணிகள் ஒரு நாளை வவுனியாவில் கழிக்க வேண்டியதாகின்றது. தங்குமிடம் ஏதுமின்றிப் பலர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இந்த ஒரு நாளையும் கழிக்க வேண்டியுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (25)

## விவசாயிகளுக்கு விநியோகம்

வட்டுக்கோட்டை வடக்குப் பிரிவு கிராமிய உணவு உற்பத்திக்குழுவினர் தமது பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு மண்வெட்டி, உரம், விதை நெல் முதலானவற்றை விநியோகிக்கவுள்ளனர்.

இவற்றைப் பெற விரும்பும் விவசாயிகள் இன்று கிராமிய உணவுஉற்பத்திக்குழுவில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

அரியாலை வெற்றி வள்ளுவர் விளையாட்டுக் கழகம் அதன் 40 வது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடாத்திவரும் ஓவர்சேம் முறையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக்கழகத்தை 15:10, 15:8 என்ற புள்ளிகள் கணக்கில் இருநேர் செற்றுகளால் தோற்கடித்தது (16)

## அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக்கொள்ளும்

குழந்தைகள் வளரும் சூழ்நிலைக்கு ஏற்ப அதன் குணங்களும் அமையும் என உளவியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள்.

குறை கூறி வளர்க்கும் குழந்தை வெறுப்பைக் கற்றுக் கொள்ளும். அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்ளும்.

கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வாழ்கிறது. அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகின்றது சகிப்போடு வாழும் குழந்தை பொறுமையைக் கடைப்பிடிக்கும். ஊக்குவிக்கப்படும் குழந்தை மனத்திண்மை பெறுகின்றது புகழப்படும் குழந்தை பிறரை மெச்சக் கற்றுக் கொள்ளும் நேர்மையோடு வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக் கொள்ளும். பாதுகாப்போடு வளர்க்கப்படும் குழந்தை தம்பிக்கை பெறுகின்றது. நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்கின்றது. (21)

## வன்செயலால்பாதிப்புற்றோருக்கு 50 ஆயிரம்ரூபா வரை நஷ்டஈடு

அண்மைய பிரச்சினையால் பாதிக்கப்பட்டோருக்கு 15 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவரை புனர்வாழ்வு அமைச்சினால் நஷ்டஈடாக தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டோருக்கு பின்வரும் விதத்தில் நிவாரணம் வழங்கப்படுகிறது.

வயது வந்த ஒருவர் இறந்தால் 25 ஆயிரம் ரூபா, திருமணமானவர் இறந்தால் 50 ஆயிரம் ரூபா, பராயமடையாதோர் இறந்தால் 25 ஆயிரம் ரூபா.

வயதுவந்தவர் ஒருவர் காயமடைந்தால் கூடியபட்சம் 25 ஆயிரம் ரூபா பராயமடையாதோர் காயமடைந்தால் 15 ஆயிரம் ரூபா. (08)

## ரயில் விபத்தில் காயமுற்றோர் தொடர்பு கொள்ள அறிவிப்பு

கம்பஹாவில் நிகழ்ந்த யாழ்தேவி ரயில் விபத்தில் காயமடைந்த பயணிகள் நஷ்டஈட்டைப் பெறுவதற்கு தமது விண்ணப்பங்களை புகையிரதத் திணைக்கள வர்த்தக சுப்ரின்டென்டனுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ரயில் விபத்துக்களில் காயமடைந்தோருக்கு புகையிரதப் பகுதி ரூபா 50 ஆயிரம் வரையில்நஷ்டஈடு வழங்கியது. இதே நடைமுறையே இந்த விபத்திலும் பின் பற்றப்படவுள்ளதாக புகையிரதப் பகுதி தெரிவித்துள்ளது. (08)

## கிராம சேவகர் பிணையில் விடுதலை

அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் வாழைத் தோட்டப் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குரும்பசிட்டி கிராமசேவகரான நவரட்ணம் கெந்தராஜா என்பவரை 5000 ரூபா காசுப் பிணையிலும் 2 ஆள் உறுதிப் பிணையிலும் செல்வதற்கு மேன் முறையீட்டு நீதி மன்றம் அனுமதி வழங்கி உள்ளது. நீதியரசர்களான பி. பாலகிட்ணர் கலாநிதி குணவர்தனா ஆகியோரே பிணை மனுவை ஏற்று அனுமதி வழங்கினர்,

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்திருந் போது விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளை வாழைத்தோட்டப் பொலிஸாரால் கடந்த யூலை 17-ம் திகதி சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (21)

## இன்று பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பிரிவு 'கல்வி வளர்ச்சிக் கழக' அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ப.சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 102 பாடசாலைகளினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

## 12 மில்லியன் உதவி

கிழக்குப் பல்கலைக்கழக புனரமைப்பிற்காக நோராட் வழங்கவிருக்கும் உதவித் திட்டத்தின் முதல் கட்டமாக 12 மில்லியன் ரூபாவை வழங்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தை சுமுகமாக இயங்க வைப்பதற்காக முதலில் ஆய்வுகூட உபகரணங்கள் இந்நிதியில் கொள்வனவுசெய்யப்படவுள்ளன. (08


### வாகன வாடகைக்கான கூறுவிலை கோரல்

கொழும்பு, அனுராதபுரம், வவுனியா களஞ்சியங்களிலிருந்து பசளை. விவசாய இரசாயனப் பொருட்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றிவருதற்கான லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவெம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது,

**விண்ணப்பங்கள் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்**

1) விண்ணப்பதாரியின் பெயரும், விலாசமும்.
2) ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.
3) கோரப்படும் லொறிக்கூலி.
   3. 1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி,
   3. 2 முழுத்தூரத்துக்குமான கூலி.
   கொழும்பு — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
   அனுராதபுரம் — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
   வவுனியா — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
4) தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

முல்லைத்தீவு மாவட்டம்.

இ. தர்மகுலசிங்கம்
அரசாங்க அதிபர்.

10025



UNIVERSITY OF JAFFNA

### Tender Notice

Tenders are invited for writing identification numbers on items belonging to Faculty of Science, University of Jaffna. (approximately 12,000 Nos )

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 28.10 91 to 30 10.91 on producing receipt from Bursar, University of Jaffna for the following;

(a) Non-refundable dep-osit - Rs 250/=

(b) Refundable deposit Rs. 2500/=

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 06.11 91 at 10.00 a m

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.

10029

# ஆயுதப்படையில் வேடுவர்கள்!

# ஆய்வறிக்கை அம்பலப்படுத்துகிறது

இலங்கை அரச படைகளில் மஹியங்கனைப் பகுதிகளைச் சேர்ந்த வேடுவ இளைஞர்களும் சேர்க்கப்பட்டுள்ள விடயம் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இலங்கை வேடுவர் பற்றி அண்மையில் மஹியங்கனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் 'விந்தனை, மஹியங்கனை, றத்துக்கலைக் காடுகளில் முன்னர் தனித்துவ வாழ்க்கை நடாத்தி வந்த வேடுவச் சமூகத்தினர் சமீப காலங்களில் கல்லோயா, மகாவலிக் குடியேற்றத் திட்டங்கள் தோன்றியதன் காரணமாக அங்கு குடியேறி இதர சமூகத்தவர்களுடன் கலந்து திருமணம் செய்து விவசாயத்திலும், வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். சிலர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். கல்வி அறிவு அற்ற பல வேடுவ இளைஞர்கள் பலர் ஆயுதப்படைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்புவிழாவில் அதிரடிப்படை பரிசுபெறவந்தோரும் கைதாகினர்

பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா நடந்து கொண்டிருந்த வேளையில் அப்பாடசாலையை முற்றுகையிட்ட அதிரடிப் படையினர் விழாவைக் கண்டு களிப்பதற்காக அங்கு கூடியிருந்த பொதுமக்களுள் இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

இச் சம்பவம் அக்கரைப்பற்று கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயத்தில் நடந்துள்ளது.

கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டோரில் அங்கு பரிசு பெறக் காத்திருந்தோரும் அடங்குவர் (08)

## ராணுவம் எடுத்த லோறிகளுக்கு

### நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

இராணுவத்தினரின் தேவைக்காக வவுனியாப் பகுதியில் தனியாரிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்ட லொறிகள் பற்றிய விவரங்களை வவுனியா பிரஜைகள் குழு சேகரித்து வருகின்றது.

லொறி உரிமையாளர் சிலருக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து அமைச்சரவை இணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஜைகள் குழுத் தலைவர் சொர்ணபாலா பிரஜை தாபித்ததுடன் அவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமெனவும் கோரியுள்ளார் (08)

## மலேரியா

பேசாலையிலுள்ள அகதி முகாமிலும், அகதி முகாம் சுற்றாடலிலும் மலேரியா நோய் மீண்டும் பரவி வருவதாக அறிவிக்க படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்னரும் இப்பகுதி மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது.

## நிர்வாகசேவை தகுதிகாண் பரீட்சை

## நவ. 11 க்கு ஒத்திவைப்பு

இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இலங்கை நிர்வாகசேவை தகுதிகாண் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கின்றது

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## கப்பலில் பார்ஸல் சேவை

### தனியார் நிறுவனம் ஆரம்பிக்கும்

வடபகுதிக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தனியாரும் பார்ஸல்களை அனுப்புவதற்கான புதிய ஏற்பாடு ஒன்று செய்யப்படவுள்ளது

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்று இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

கொழும்பில் கையேற்கப்படும் சிறுதொகை உணவுப் பொதிகள் பருத்தித்துறைக்கு கப்பலில் கொண்டு வரப்பட்டு பின்னர் குறித்த தனியார் நிறுவனத்தின் முகவரினால் யாழ் நகரில் விநியோகிக்கப்படும். (08)

## விளையாட்டு அதிகாரி தெரிவு

## 300 இடங்களுக்கு 2600 பேர் போட்டி

விளையாட்டுத்துறை அமைச்சு 300 விளையாட்டுத்துறை அதிகாரிகளைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சையொன்றை இம் மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் நடாத்தவுள்ளது.

மொத்தம் 2600 பேர் இப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் இவர்கள் நியமிக்கப்படுவர்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கடந்த 15 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவை இன்னும் வடபகுதி விண்ணப்பதாரிகளை வந்தடையவில்லை. (08,16)

# செய்தி உலகம்

## 3 நாளில் இந்த மாற்றம்

கடந்த 6 மாதங்களில் சுமார் 350 தொன் தங்கம் வெளிநாட்டுக்கு மாற்றப்பட்டதன்மூலம் சோவியத்ரஷ்யாவின் கையிருப்பு குறைந்துள்ளது. சதிப்புரட்சியையடுத்து 3 நாள் பதவியிலிருந்த 8 பேரடங்கிய அவசரகாலக் கமிட்டியே இத்தங்கத்தை நாட்டைவிட்டு அனுப்பியது.

## இமயமலை குப்பை மேடாகிறது

இமாலய மலைச்சரிவு பிரமாண்டமான குப்பை மேடாகிறது. அதைச்சுத்திகரிப்பதற்கு மேற்கு நாட்டு உல்லாசப் பயணிகளும், மலையேறிகளும் தங்கள் பங்கைச் செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (08)

## 'நாட்டுப்பயல்' செய்த வேலை

தென்கொரிய விவசாயி ஒருவர் இரவு கிளப் ஒன்றுக்கு பெற்றோல் ஊற்றி தீவைத்ததால் 16 பேர் கொல்லப்பட்டனர்.

'நான் மதுபானம் கேட்டேன். ஆனால் ஊழியர்கள் என்னை 'நாட்டுப்பயல்' என்று இழிவு செய்தனர். இதனால் நான் ஆத்திரமுற்றேன்' என்று அவ்விவசாயி பொலிஸாரிடம் தெரிவித்தார். (08)

## எஞ்சியதும் அகற்றப்பட்டது

கிழக்கு ஜேர்மனியில் 1989 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜனநாயகப்புரட்சியில் தப்பிய ஒரேயொரு லெனின் சிலையும் அகற்றப்பட உள்ளது.

கிழக்கு ஜேர்மனியில் 40 வருட கால கம்யூனிஸ்ட் ஆட்சியின்போது 1970 ஆம் ஆண்டு 63 அடி உயரமுள்ள இச்சிலை உருவாக்கப்பட்டது.

மேற்கு ஜேர்மனி மக்களின் ஆதிக்கத்தில் உள்ள பெர்லின் நகர அரசாங்கம் பாதுகாக்கப்படும் வரலாற்றுச்சின்னங்களின் பட்டியலில் இருந்து இச்சிலையை அகற்றிவிட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு

## தினமும் மேலதிக ரயில் சேவை

கொழும்பிலிருந்து - வவுனியாவுக்கு மற்றொரு மேலதிக ரயில் சேவை கடந்த 15 ஆம் திகதி முதல் நடாத்தப்பட்டு வருகின்றது.

தினமும் காலை 7மணிக்குக் கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் இந்த மேலதிக ரயில் பிற்பகல் இரண்டு மணிக்கு வவுனியாவை வந்தடையும். பின்னர் அது பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டு நான்கு மணிக்கு அனுராதபுரத்தைச் சென்றடையும்.

இந்த ரயிலில் பயணம் செய்யும் பயணிகள் அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு பஸ்வண்டிகளில் பயணத்தைத் தொடரலாம்.

இதுதவிர காலை 8 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும் வவுனியாவிலிருந்து கொழும்புக் கோட்டைக்கு வழமையான ரயில் சேவைகள் நடாத்தப்படும்.

## குண்டசாலை டிப்ளோமாபயிற்சி; டிச.13வரை விண்ணப்பிக்கலாம்

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் இரண்டு வருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான போட்டிப் பரீட்சை மார்ச் மாதம் 21-ம் திகதி நடாத்தப்படவுள்ளது. விண்ணப்பங்கள் டிசம்பர் மாதம் 13-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விவரங்கள் இம் மாதம் 18-ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் உள்ளன.

## சர்வதேச ஊழியர்க்கு விசேட விடுமுறை

உலக சுகாதார ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களில் கடமையாற்றுவதற்கு அரசாங்க ஊழியர்களுக்கு விசேட விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு சம்பளமற்ற விடுமுறையினை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

## வடமராட்சி அகதிகளுக்கான செஞ்சிலுவை உதவி நிறுத்தம்

தமது சொந்த இருப்பிடங்களை விட்டுவெளியேறிய வடமராட்சி மக்கள் நிலைமை ஓரளவு சீராக உள்ளதைத் தொடர்ந்து தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருப்பதால் இவர்களுக்கான உதவி வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளதாக செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (04)

## தமிழ்மொழி அமுலாக்கம்

### அமைச்சரும் அதிருப்தி

அரச திணைக்களங்களில் தமிழ் மொழியை அமுலாக்குவதில் திணைக்களத் தலைவர்கள் அக்கறையற்றிருப்பதாக இராஜாங்க அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு தமிழ் மொழியில் கடிதங்களை பல அலுவலகங்கள் அனுப்பிவைப்பதில்லை-இதற்குபோலிக்காரணங்கள் கூறப்படுகின்றன எனவும்அமைச்சர்கூறியுள்ளார் 08

# மட்டக்களப்பு அகதி முகாமில் 181 மலையகக் குடும்பங்கள்

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள வீச்சுக்கல் அகதிமுகாமில் 181 மலையகத் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன.

புல்லுமலை, பெரியபுல்லுமலை போன்ற இடங்களில் வாழ்ந்துவந்த இவர்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த முகாமில் தஞ்சம் புகுந்தனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் குறைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 79,352 பேர் அகதிகளாக வாழ்வதாக அரசாங்க அதிபரின் அறிக்கைகூறுகிறது. 08

## அடையாள அட்டை பெற இரு விண்ணப்பங்கள்

யாழ் மாவட்டத்திலிருந்து தேசியஅடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் பலர், அவை தமக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் வெளி மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான விண்ணப்பங்கள் சில கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட காலம் வசித்தவர், கொழும்பிலும் சில காலம் வசித்ததாக அப்பகுதி கிராம சேவகர்களுக்கு லஞ்சம் கொடுத்து உறுதிப்படுத்தியிருக்கலாம் என ஆட்பதிவு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 25

## தீவுப்பகுதி அகதிகளுக்கு சங்கானையில் நிவாரணம்

தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு ஒரு வார கால இலவச உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்க சங்கானை உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் அகதிகளுக்கான நிவாரணம் விரைவில் வழங்கப்படவுள்ளது

அகதிகள் தாம் இடம் பெயர்ந்து வந்தமையைக் கிராம சேவையாளர் மூலம் உறுதிப்படுத்தி ஒருவாரகாலத்திற்கான இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. 18

## யாழ் ஆஸ்பத்திரியில் செஞ்சிலுவைத் தொண்டர்கள்

யாழ் போதனாவைத்தியசாலையில் முழுநேரமும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தொண்டர்களைசேவையில் ஈடுபடும்படி செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைச் செயலாளர் ச.சிவானந்தராசா பணித்துள்ளார்

இந்த வேண்டுகோளையடுத்து ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும்நாள் ஒன்றுக்குபத்து தொண்டர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

இதேபோல அம்புலன்ஸ் சேவையும் இரவு பகல் சேவையில் ஈடுபட்டுவருகிறது மற்றும் கோப்பாய் பிரிவுக்கிளை சைக்கிள் அம்புலன் சேவை, முதலுதவிச் சேவைகள் என்பனவற்றை தமது பகுதியில் நடத்திவருகிறது. (06-07)

## முஸ்லிம் கொலனியில் பொலிஸ்- புலிகள் மோதல்

மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி என்றபகுதியில் கடந்த சனியன்று பொலிஸ் ரோந்து அணிமீது விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இம்மோதலில் பொலிஸார் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டது. புலிகள் தரப்பில் ஜெயா (த. ஜெயக்குமார் இருதயபுரம்). ஜெகன் (அ. சந்திரகுமார் கல்லடி) ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

## ஹெலி சுட்டு வியாபாரி காயம்

நேற்றுக்காலை 7 மணியளவில் தனங்கிளப்புச் சந்தியில் ஹெலிக்கொப்டர் ஒன்று சுட்டதில் மண்ணெண்ணெய் வியாபாரி ஒருவர் பலத்த காயத்துக்குள்ளானார் 18

## சங்கானையில் ஒய்வூதியம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் இன்று புதன்கிழமை ஓய்வூதியக் கொடுப்பனவு ரொக்கப்பணமாக வழங்கப்படவுள்ளது. (18)

## செஞ்சிலுவை தொண்டர்களுக்கு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவுத் தொண்டர்களை 18 வேம்படி வீதி அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பென்சன் வவுச்சர்

இம்மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள் கொழும்பில் தயார் நிலையில் இருப்பதாகவும் போக்குவரத்து சீரானதும் அவை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 06

## பயிலுநர் ஆசிரியர் பரீட்சை கிளிநொச்சியில்நடைபெறும்

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பட்டதாரி, பயிலுநர் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சை கிளிநொச்சியில் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களைப்பூர்த்திசெய்து நவம்பர் 11ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறும் கிளிநொச்சி கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிப்பரீட்சையை மார்கழி மாதம் 4ஆம் திகதியில் கிளிநொச்சியில் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் இடமாற்றம் பெறுவதால் இதற்குப்பதிலாக புதிய ஆசிரியர்கள் நிரப்பப்படுவர் என வடக்கு, கிழக்கு கல்வி அமைச்சின் சுற்றுநிருபங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## வவுனியா ஊரடங்கால் லொறிகள் இடைவழியில்

வவுனியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் இருந்து விவசாய விளை பொருள்களுடன் கொழும்பு சென்ற எழுபத்தைந்துக்கு மேற்பட்ட லொறிகள் நேற்றுக்காலை வவுனியாவில் இருந்து யாழ் குடா நோக்கித் திரும்பியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த லொறிகள் கிளிநொச்சி முறிகண்டி பூநகரிப் பகுதிகளில் பெருமளவு தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்களுடன் வந்த லொறிகளும் வவுனியாவுக்கு அப்பால் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

### பண்ணையில் ...

வும் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனாலேயே படையினர் நடவடிக்கை தாமதம் அடைவதாகவும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மக்கள் ...

துக்கு படையினரால் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன

ஆனையிறவின் வடகிழக்காகவும், ஆனையிறவு கடலுக்கு வடக்காகவும் உள்ள பகுதிகளும் நேற்று நண்பகல் முதல் மக்கள் நடமாட்டத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

### பாராளுமன்ற ...

முடியாது என எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இன்று கூடவுள்ள பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டத்தின் சில குறைநிரப்புப் பிரேரணைகள் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

### மண்டைதீவிலிருந்து.-

வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் நடமாட்டம் இங்கு குறைந்திருந்ததால் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை. (07)

### கௌதாரி ...

கருகில் உள்ள வெட்டுக்காடு எனும் பகுதியில் ஹெலிகொப்டர்கள் மூலம் தரையிறக்கப்பட்டனர்.

இதனை முன் கூட்டியே எதிர்பார்த்து அங்கு காத்திருந்த விடுதலைப்புலிகள் படையினர் மீது கடும் தாக்குதல் ஆரம்பித்தனர்.

இதனால் படையினர் தரையிறங்கிய இடத்திலிருந்து நகர முடியாமலும் ஹெலிகள் மூலம் மீட்க முடியாத நிலையிலும் திணறுவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தொடர்ந்தும் கௌதாரி முனை, வெட்டுக்காடு, பூநகரி. கேரதீவுப் பகுதிகளில் விமானத்தாக்குதலும் பீரங்கித் தாக்குதலும், ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும் என மும்முனைத்தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. 07

### செஞ்சோலை ...

கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் என்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரன் வாழ்த்தியுள்ளார்.

இந்தச்செஞ்சோலை இல்லம் ஒரு புதிய, புரட்சிகரக் கல்வியின் பரிசோதனைக் களமாக அமையவேண்டும். மண் பற்றும், மக்கள் பற்றும் கொண்ட ஒரு புதிய அறிவு சார்பரம்பரையை உருவாக்கித் தரவேண்டும். சுபீட்சகரமான தமிழீழ சமுதாயத்தைப் படைக்கும் தேச நிர்மாணிகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்டச் சூழலில் இந்தச் செஞ்சோலை வளாகத்தில், நாம் இன்று இந்த இளம் விதைகளைப் பயிரிடுகிறோம். இவை வேர்விட்டு வளர்ந்து, விழுதுகள் பரப்பி, விருட்சங்களாக மாறி, ஒரு காலம் தமிழீழத் தேசத்தின் சிந்தனைச் சோலையாக செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்தப் புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்! இவ்வாறு அவர் தமது வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

### எழுவைதீவு ...

ஆசீர்வாதம் மருத்தீன்பிள்ளை (58-தகப்பன்) ஆகியோரே இவ்வாறு வந்துள்ளனர்.

கடற்படையினர் இவர்களை காங்கேசன்துறைக்குகொண்டு வந்து கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பிவைத்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்துள்ளது 07)

### களுத்துறைச் ...

சித்தது.

இவர்களில் அநேகமானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், உண்ணாவிரதம் இருப்பவர்களில் சிலர் அபாயகரமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு நாடு போரில் ஈடுபட்டுள்ளவேளையில் சந்தேக நபர்களை விடுவிக்க முடியாது எனத்தெரிவித்துள்ளதாம்.

### யாழ் நகரில் ...

கொட்டடிப் பகுதியில் நான்கு குண்டுகளை வீசிச் சென்றது. இதனால் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன, 04, 07. 06, 33

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 23.10.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.